**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01 /18** P.W. 2

Deposition of witness for Prosecution:

| | | | | |
|---|---|---|---|---|
| Name | :திருமதி. சுகன்யா | Father's / Husband Name ஜெரோம் | | |
| Village | : | Taluk | : | |
| Religion | : | Age | : | |
| Date | :19.10.2019 | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 19.10.2019.

**முதல் விசாரணை**.

நான் தற்போது தூத்துக்குடி 359/74 மினி சகாயபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம். அசா.1 எனது அம்மா ஆகும். ஆஜர் எதிரிகளை பார்த்துள்ளேன். தூத்துக்குடியில் என் அப்பாவிடம் கோவித்துக்கொண்டு குழந்தையுடன் வேளாங்கண்ணி வந்தேன். தூத்துக்குடியில் இருந்து எனது குழந்தையுடன் 31.01.2016ம் தேதி வேளாங்கண்ணி வந்தேன். வேளாங்கண்ணி மாதா குளம் அருகே எனது குழந்தையை வைத்துக்கொண்டு இருந்தேன். அங்கு மாதாகோயில் குளம் பக்கத்தில் எதிரிகள் மற்றும் நான்கு ஐந்து நபர்களுடன் ஒன்றாக இருந்தார்கள். அதன் பின்னர் நான் எனக்குத் தெரிந்த நபரிடம் கூறி வேளாங்கண்ணியில் உள்ள கேசெட் கடையில் வேலைக்கு சேர்ந்தேன். மறுநாள் 01.02.2016ம் தேதி வேலைக்கு சேர்ந்தேன். என் குழந்தையை எதிரி லெட்சுமி பால் வாங்கி கொடுப்பதற்காக நான் சம்பாதித்து கொண்டுவந்த பணத்தை எதிரி லெட்சுமியிடம் கொடுத்தேன். என்னுடன் அங்கு தங்கியிருந்த வகையில் நாலுபேரும் என்னுடன் பழகிவந்தார்கள். நான் என் குழந்தையை எடுத்துக்கொண்டு ஊருக்கு போவதாக எதிரி லெட்சுமியிடம் கூறினேன். அதற்கு எதிரி லெட்சுமி நான் இங்கே வேலை வாங்கி தருகிறேன் இங்கேயே இரு என்று கூறினார். 2.2.2016ம் தேதி நான் மாதாகுளத்தில் அருகில் உள்ள பாத்ரூமிற்கு செல்வதற்காக என் குழந்தையை லெட்சுமியை பார்த்துகொள்ளுமாறு கூறிவிட்டு பாத்ரூமிற்கு சென்றேன். நான் பாத்ரூமிற்கு சென்றுவிட்டு இயற்கை உபாதைகளை கழித்துவிட்டு திரும்ப வந்து எதிரிகளோடு குழந்தை இருந்த இடத்தை பார்த்தேன். அங்கு எனது குழந்தையும் ஆஜர் எதிரிகளும் அங்கு காணவில்லை. அக்கம் பக்கத்தில் எதிரிகளை தேடிப்பார்த்தேன். எனது குழந்தையையும் தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை. உடனே நான் அருகில் இருந்த வேளாங்கண்ணி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். ஆனால் நான் கொடுத்த புகாரை அங்கு இருந்த காவல் துறையினர் எடுத்துக்கொள்ளவில்லை. நான் எனது ஊரான தூத்துக்குடிக்கு சென்றுவிட்டேன். அப்போது எனது அம்மா வீட்டில் இல்லை. அருகில் உள்ள புளியம்பட்டி கிராமத்தில் நடந்த கோயில் திருவிழாவிற்கு எனது அம்மா சென்றிருந்தார். நான் காலையில் தூத்துக்குடி சென்றேன். மதியம் வாக்கில் எனது அம்மாவும் அப்பாவும் புளியம்பட்டியில் இருந்து வீட்டிற்கு வந்தார்கள. நான் போனபோது வீடு பூட்டி இருந்தது. சாவி வைக்கும் இடம் எனக்குத் தெரியும் என்பதால் நான் சாவியை எடுத்து

வீட்டை திறந்து உள்ளே இருந்தேன். மதியம் 2 மணியளவில் எனது அம்மா, அப்பா இருவரும் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களிடம் என் குழந்தை பற்றிய விபரங்களை அந்த நேரத்தில் அவர்களிடம் கூறவில்லை. எனது அத்தை ஹெரிமிலதா வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் என்னிடம் என் குழந்தை எங்கே என்று என்னிடம் கேட்டார்கள். நான் அழுதுக்கொண்டிருந்தேன். நான் வேளாங்கண்ணியில் நடந்த சம்பவங்களை எனது அத்தையிடம் கூறினேன். நான் எனது அத்தையிடம் வேளாங்கண்ணியில் குழந்தை காணவில்லை என்ற விபரத்தை கூறும்போது என் பெற்றோர்கள் அருகில் இருந்தார்கள். இந்த விபரத்தை தெரிந்து கொண்ட என் பெற்றோர் இருவரும் கிளம்பி வேளாங்கண்ணிக்கு வந்தார்கள். என் பெற்றோர்கள் வேளாங்கண்ணி காவல் நிலையத்திற்கு வந்து எனது குழந்தையின் புகைப்படத்தை காண்பித்து புகார் கொடுத்தார்கள். அதை வாங்கி கொண்டார்களா என்ற விபரம் எனக்குத் தெரியாது. மாதாகுளம் அருகில் உள்ள இடத்திற்கு சென்று என் அம்மா அப்பா ஆகிய இருவரும் என் குழந்தையின் புகைப்படத்தை காண்பித்து விசாரித்து அந்த போட்டோவின் பின்புறம் என் தாயாரின் செல் நம்பரையும் குறிப்பிட்டு தேடிவந்தார்கள். அப்போது எனது பக்கத்தில் இருந்த மேரி என்பவரும் அவருடைய குழந்தை திவ்யா 10 வயது மதிக்ககூடிய சிறுமி போட்டோவை காட்டி விசாரிக்கும்போது மேற்படி மேரி நாங்கள் அந்த குழந்தையை வாங்கி தருகிறோம் நீங்கள் இங்கேயே இருங்கள் என்று என் பெற்றோரிடம் கூறினார்கள். அப்போது மேரி என் குழந்தை நாகூரில் தர்காவில் உள்ளதாக கூறியதால் வடநாட்டு மொட்டைப்போட்ட தமிழ்பேச தெரிந்த இந்திகார பெண் என் அம்மாவை அழைத்து சென்றார்கள். அங்கு தர்காவில் இருந்த லேடியிடம் போட்டாவை காட்டி விசாரித்தபோது எனது குழந்தையுடன் எதிரிகள் 10 வயது சிறுமி திவ்யாவும் இருந்ததாக கூறினார்கள். திவ்யா அம்மா மேரியும் அங்கு இருந்தார். திவ்யா எதிரிகளின் லக்கேஜ் இரயில்வே ஸ்டேஷனில் பொருட்கள் பாதுகாத்து வைக்கும் இடத்தில் இருப்பதாகவும் கூறினார்கள். அம்மா ஊருக்கு வந்தார். என்னிடம் விபரம் சொன்னார். உடனே நானும் எனது அம்மாவும் ஈரோடு இரயில்வே ஸ்டேன் ஜாமான் வைக்கும் இடத்தில் சென்று அங்குள்ள இரயில்வே அதிகாரியிடம் குழந்தையை காணவில்லை என்று கூறி அவர்கள் அனுமதித்து ஜாமான்களை திறந்து பார்க்கும்போது அதில் அவருடைய பொருட்கள் மற்றும் ரேஷன்கார்டு, லெட்சுமியின் புகைப்படம், ஒரு நோட்டில் குறித்துவைத்திருந்த போன் நம்பர்களையும் குறித்துக்கொண்டு வந்தோம். அந்த அதிகாரியின் அனுமதியுடன் ரேஷன்கார்டையும் போன் நம்பர் குறித்து வைத்திருந்த நோட்டையும் எடுத்து வந்தோம். எடுத்தபிறகு உடனே நாங்கள் மதுரையில் உள்ள பரவை என்ற இடத்திற்கு சென்று எதிரி லெட்சுமியின் வீட்டை விசாரித்து அந்த இடத்திற்கு சென்றோம். அந்த வீட்டில் எதிரியின் தாயாரும் எதிரி லெட்சுமியின் சகோதரியும் இருந்தார்கள். எதிரி அக்கா ராக்குவிடம் நடந்த விபரத்தை கூறி விசாரிக்கும்போது எதிரி லெட்சுமி 10 வருடங்களுக்கு முன்பாக வீட்டைவிட்டு சென்றுவிட்டார் என்றும் சொன்னார். லெட்சுமியின் தற்போதைய கணவர் ஈஸ்வரனின் முகவரியை ராக்கு நாங்கள் கேட்க முகவரியை கொடுத்தார். அவர் போடி அருகே

தர்மத்துப்பட்டியில் இருந்ததாக சொன்னார். உடனே அந்த முகவரிக்கு நானும் எனது அம்மாவும் போடிக்கு சென்றோம் ஆனால் அங்கு அட்ரஸ் மாறி சென்றுவிட்டோம். அதனால் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஆகவே நானும் எனது அம்மாவும் தூத்துக்குடிக்கே திரும்ப வந்துவிட்டோம். நானும் எனது அம்மா, அப்பா ஆகியோர் தூத்துக்குடியில் இருந்து திரும்ப மதுரை பரவை வந்து பரவையில் இருந்த ராக்குவின் வீட்டிற்கு சென்று அட்ரஸ் பிடப்படவில்லை என்று விபரம் சொல்லி ராக்குவை கூட்டிக்கொண்டு அட்ரசை காட்டச்சொல்லி போடி தருமத்துப்பட்டிக்கு வந்தோம். அவர் ஈஸ்வரனின் வீட்டை காட்டிவிட்டு ராக்கு சென்றுவிட்டார். அந்த வீட்டில் ஈஸ்வரனின் தகப்பனார் வெள்ளப்பாண்டியும் அரவது மனைவியும் இருந்தார்கள். வெள்ளப்பாண்டியிடமும் அவருடைய மனைவிடமும் நடந்த விபரத்தை சொன்னோம். எதிரிகள் என் குழந்தையை கடத்தி சென்ற விபரத்தையும் சொன்னோம். வெள்ளப்பாண்டி நாங்கள் சொன்னதை கேட்டு வருத்தப்பட்டு வெள்ளப்பாண்டி எதிரி ஈஸ்வரனுக்கு போன் போட்டார். அப்போது வெள்ளப்பாண்டி எதிரியிடம் நீ குழந்தையை வைத்திருக்கிறாயா இங்கு வந்திருக்கிறார்கள். உடனே கொண்டுவந்து ஒப்படைத்துவிடு என்று சொன்னார். அப்பொழுது அந்த போனில் குழந்தை அழும் சத்தம் கேட்டது. அதுகுறித்து வெள்ளப்பாண்டி எங்களிடம் குழந்தை எதிரியிடம்தான் இருக்கிறது என்றும் அவர் கொண்டுவந்து ஒப்படைப்பார் என்றும் நம்பிக்கையாக சொன்னார். எங்களை அவர் அங்கு இருங்கள் குழந்தையை தான் வாங்கிதருகிறேன் என்று சொன்னார். பிறகு வெள்ளப்பாண்டி ஈஸ்வரனுக்கு போன் செய்தார். ஈஸ்வரன் போனில் பேசவில்லை. ஈஸ்வரன் போனில் பேசாததால் வெள்ளப்பாண்டி குழந்தையை ஒப்படைப்பது பற்றி கெடு கேட்டார். இரண்டு நாளில் வாங்கி தருவதாக சொன்னார். அவருடைய போன் நம்பவரை நாங்கள் வாங்கி கொண்டோம். எங்களுடைய போன் நம்பரை அவருக்கு கொடுத்தோம். எதிரி லெட்சுமியும் ஈஸ்வரனும் குழந்தையை கொடுப்பார்களா இல்லையா என்ற சந்தேகத்தின்பேரில் அருகில் உள்ள காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தோம். அங்கு காவல் துறையை சார்ந்த ஹேமலதாவிடம் நடந்த கதையை சொன்னோம். நாங்கள் ஹேமலதா ஆய்வாளரிடம் வெள்ளப்பாண்டியின் வீட்டை போலிஸ் ஜீப்பில் சென்று அடையாளம் காட்டினோம். அங்கு ஹேமலதா ஆய்வாளர் வெள்ளப்பாண்டியையும் அவரது மனைவியையும் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்தனர். வெள்ளப்பாண்டி போலிசாரிடம் ஒருவாரம் குழந்தையை ஒப்படைக்க டைம் கேட்டார். எங்களிடமும் ஒருவாரம் கெடு கேட்டார். பிறகு தூத்துக்குடிக்கு வந்துவிட்டோம். பிறகு எனது அம்மா ஜெயந்தி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் எனது குழந்தை காணாமல் போனதை கண்டுபிடித்து தருமாறு புகார் கொடுத்தார். அது சம்மந்தமாக தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். அதன் பின்னர் ஒரு வழக்கறிஞர் மூலம் மதுரை உயர் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவின் படி சிபிசிஐடி நாகப்பட்டினம் போலிசாரை விசாரிக்க உத்தரவிடப்பட்டது. சிபிசிஐடி போலிசார் ஆய்வாளர் சரவணன் எனது தாயாரை போனில் தொடர்பு கொண்டு விசாரணைக்கு

என்னை கூட்டிக்கொண்டு வருமாறு சொன்னதால் நாங்கள் போலிசார் சொன்னபடி சம்பவ இடமான மாதாகுளம் வேளாங்கண்ணி பாத்ரூம் அருகே போலிசாருக்காக காத்திருந்தோம். அங்கு ஒரு பெண் காவலரும் ஒரு ஆண் காவலரும் ஆய்வாளர் சரவணனும் வந்தார்கள். அங்கு நடந்த கதையை எங்களிடம் கேட்டார்கள். பாத்ரூமை காட்டினேன். அக்கம் பக்கத்திலும் விசாரித்தார்கள். பிறகு சிபிசிஐடி போலிசாரோடு நாங்கள் நாகப்பட்டினம் சிபிசிஐடி அலுவலகத்திற்கு வந்தோம். ஆய்வாளர் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்தோம். ஆய்வாளர் குழந்தையை கண்டுபிடித்து தருவதாக சொன்னார். இடையே ஆய்வாளரிடம் நாங்கள் குழந்தை கிடைத்துவிட்டதா என்று கேட்போம். ஆய்வாளர் கொஞ்ச நாளில் கண்டுபிடிப்போம் என்றும் கண்காணித்துவருவதாகவும் சொன்னார். ஒரு 6 மாதம் கழித்து ஒரு நாள் இரவு 8 மணிக்கு ஆய்வாளர் சரவணனிடம் இருந்து குழந்தையை கண்டுபிடித்துவிட்டதாகவும் கோர்டுமூலம் குழந்தையை அடையாளம் காட்டி பெற்று செல்லுமாறு உடனே நாகப்பட்டினம் வருமாறு போன் பண்ணி சொன்னதால் உடனே நானும் எனது தாயாரும் புறப்பட்டு 23.3.2017 அன்று நாகப்பட்டினம் வந்து இந்த நீதிமன்றத்தில் குழந்தையை அடையாளம் காட்டி குழந்தையை பெற்று சென்றோம். அந்த குழந்தை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்த பொழுது லெட்சுமியின் கையில் இருந்தது. எனது குழந்தையின் அங்க அடையாளம் என்னவென்றால் அதற்கு தலையில் இரட்டை சுழி உண்டு. எனது மகள் சிரித்தாள் அவளது இரண்டு கண்ணத்திலும் அழகாக குழிவிழும் எனது மகளுக்கு மூக்கு சப்பையாக இருக்கும். இந்த அடையாளங்களை நீதிமன்றத்தில் கூறி எனது குழந்தையை பெற்று சென்றேன். அதசாஆ.2ல் உள்ள புகைப்படத்தில் கண்ட குழந்தை என்னுடைய குழந்தை ஆகும். பிறகு ஆய்வாளர் சரவணன் டி.என்.ஏ டெஸ்ட் எடக்க வேண்டும் என்று சொல்லி குழந்தையை நாங்கள் வாங்கி சென்ற இரண்டு மூன்று நாளில் திரும்ப கோர்ட்டுக்கு வருமாறு சொன்னார். நானும் எனது தாயாரும் எனது குழந்தையுடன் நீதிமன்றத்திற்கு வந்தோம். நீதிமன்றத்தின் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் வைத்து டி.என்.ஏ. டெஸ்ட் எனக்கும் என் குழந்தைக்கும் எடுக்கப்பட்டது. அந்த குழந்தை என் குழந்தை ஆகும். இது சம்மந்தமாக சிபிசிஐடி போலிசார் என்னை விசாரிக்க விபரம் சொன்னேன்.

**எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை**.

எனக்கு ஒரு அண்ணன் உண்டு. எனது அண்ணன் சுரேசுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர் தனியாக உள்ளார். நான் எனது கவணருடன் சண்டைப்போட்டுக்கொண்டு என் தாயார் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரியல்ல. நான் கிருஸ்தவர் என்பதால் எல்லா மாதாகோயில்களுக்கும் செல்வேன் என்றால் சரிதான். மதுரையில் உள்ள வாடிப்பட்டி மாதாகோயிலுக்கும் சென்றுள்ளேன். நான் தூத்துக்குடியில் எனது தகப்பனாரிடம் கோவித்துக்கொண்டு நேரடியாக வேளாங்கண்ணிக்குதான் வந்தேன். வேளாங்கண்ணி வந்துவிட்டு வாடிப்பட்டி மாதா கோயிலுக்கு குழந்தை காணாமல் போனவுடன் சென்றேன் என்றால் சரியல்ல. நேராக தூத்துக்குடிக்குதான் சென்றேன். 9 மாத குழந்தையை நான் தூக்கிக்கொண்டு வேளாங்கண்ணி வந்தேன். நான் வேளாங்கண்ணிக்கு

வந்தபோது போன் கொண்டுவரவில்லை. எனது பெற்றோர் என்னை தேடவில்லையா என்றால் பக்கதில் தேடியிருப்பார்கள். வெளிநாட்டில் இருந்த எனது கணவருக்கு நான் வேளாங்கண்ணி வந்தது தெரியாது என்றால் சரிதான். வேளாங்கண்ணி வந்தவுடன் நான் வேலையில் சேர்ந்துவிட்டேன் என்றால் சரிதான். குழந்தையை வேலை செய்யும் இடத்திற்கு கொண்டு சென்று நான்தான் பார்த்துக்கொள்வேன் என்றால் சரிதான். பிறகு மாதாகோயில் குளம் அருகில் எதிரிகள் பழக்கம் ஆனதால் எதிரிகளிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு வேலைக்கு சென்றேன். குழந்தையோடு நான் வேளாங்கண்ணிக்கு வந்தபொழுது வீடு யாரும் தரவில்லை. மாதாகுளம் அருகில்தான் எனது குழந்தையோடு தங்கினேன். குழந்தையோடு வேளாங்கண்ணி வருவதற்கு முன்பு நான் வேளாங்கண்ணியில் ஜீலா என்பவரின் பேன்ஸ்சி ஸ்டோர் கடையில் வேலைப்பார்த்தேன். அப்பொழுதுதான் வீடு கொடுத்தார்கள். இடையில் நான் தூத்துக்குடி சென்று என் மகளை பார்த்துவிட்டுவர சென்றேன். அப்பொழுது எனது அப்பாவோடு வாய் சண்டை வந்ததால் எனது குழந்தையை தூக்கிகொண்டு வேளாங்கண்ணி வந்துவிட்டேன். எனக்கு கல்யாணமாகிவிட்டது என்பதும் எனக்கு குழந்தை உள்ளது என்பதும் எனது ஓனருக்கு தெரியும் என்பதால் நான் சொல்லியுள்ளேன். குழந்தையோடு நான் இரண்டு நாள் வேளாங்கண்ணியில் இருந்தேன். அந்த இரண்டு நாளும் நான் வேலைக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் முதல் நாள் சம்பள பணத்தை எனது குழந்தையை லெட்சுமி பார்த்துக்கொண்டதால் அவரிடம் கொடுத்தேன். எனது குழந்தையை லெட்சுமி நன்றாக பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான். நான் மதியம் சாப்பிட வரும்போது குழந்தையை பார்த்துவிட்டு செல்வேன். எதிரிகள் எனக்கு வேளாங்கண்ணியில் அறிமுகமான நபர்கள் என்பதால் லெட்சுமியிடம் என் குழந்தையை பார்த்துக்கொள்ள சொன்னேன் என்றால் சரிதான். குழந்தையை எதிரிகள் கடத்தி செல்லவில்லை என்றால் சரியல்ல. லெட்சுமியிடம் ஒருநாள் மட்டும் ரூ.300/- கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிகளின் போன் நம்பர் எனக்கு முதலில் தெரியாது. ஜீலா பேன்சி ஸ்டோரில் ஜீலாவிற்கும் அவரது உறவினர் ராஜாவிற்கும் இடையே கடையில் பிரச்சனை வந்தது என்றால் சரிதான். அது அவர்களுக்குள் உள்ள பிரச்சனை. எனது அப்பா போன் மூலம் தொடர்பு கொண்டு அடிக்கடி பணம் கேட்பார் என்றால் சரியல்ல. முன்னப்பின்ன தெரியாத எதிரிகளிடம் நான் குழந்தையை கொடுத்துவிட்டு வேலைக்கு செல்லவில்லை என்றும் எதிரிகள் நன்கு அறிமுகம் ஆனவர்கள் என்பதால்தான் அவர்களிடம் குழந்தையை கொடுத்துவிட்டு நான் பாத்ரூமிற்கு சென்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளை குறித்து எனக்கு அவ்வளவாக தெரியாது. எனது கணவருடன் நான் சண்டைப்போட்டுக்கொண்டு தூத்துக்குடியில் உள்ள எனது அப்பா வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும் எனது தகப்பனார் குடித்துவிட்டு வந்து அடிக்கடி பணம் கேட்பார் என்றும் அதற்கு பயந்து எனது குழந்தையை தூக்கிகொண்டு நான் வேளாங்கண்ணி வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகளோடு இருந்த மேரி மற்றும் திவ்யாவையும் எனக்கு நன்றாகத் தெரியும் என்றால் அவ்வளவாக தெரியாது. திவ்யா எனது மகளை தூக்கிவைத்திருந்தது என்றால் சரிதான். நான் வேளாங்கண்ணிக்கு எனது

குழந்தையோடு எனது தகப்பனாரிடம் கோவித்துக்கொண்டு வந்ததை எதிரிகளிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. எனது குழந்தையை எதிரிகள் கடத்தவில்லை என்றும் நானாக முன்வந்து எதிரிகளிடம் எனது குழந்தையை வேண்டாம் என்று கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் நான் வேளாங்கண்ணியில் தங்கியிருந்து எனது புகாரின்பேரில் நடவடிக்கை எடுக்க வேளாங்கண்ணியிலேயே போலிசாரிடம் கேட்டிருப்பேன் என்றும் மாறாக தூத்துக்குடி சென்றிருக்க மாட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு குழந்தை மீது பாசம் இல்லை என்றும் அப்படி இருந்திருந்தால் குழந்தையை தேடுவதற்காக நானும் எனது அப்பா அம்மாவுடன் வேளாங்கண்ணிக்கு வந்திருப்பேன் என்றும் நானாக விரும்பித்தான் எதிரிகளிடம் குழந்தையை கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் வெளிநாட்டில் இருந்ததால் உடனடியாக குழந்தை காணாமல் போனதை அவருக்கு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது குழந்தை மீது எனக்கு பாசம் இல்லை என்பதால்தான் எனது கணவருக்கும் குழந்தை கடத்தப்பட்ட விபரத்தை உடனடியாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஏனென்றால் எனது கணவர் வெளிநாட்டில் இருந்ததால் அவரது இன்டர்நெட் செல்போன் எண் எனக்குத் தெரியவில்லை. நான் எதிரிகளிடம் குழந்தையை வேண்டுமென்றே விரும்பி கொடுத்துவிட்டேன் என்றும் இந்த விபரம் எனது குடும்பத்திற்கு தெரிந்துவிட்டதால் அவர்களிடம் நல்ல பெயர் எடுக்க எதிரிகள் குழந்தையை கடத்திவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.